
# படகு மூழ்கிய காவியம்



மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு மூழ்கிய காவியம்

மூதூர் எம்.எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


- நூலின் பெயர் :- படகு மூழ்கிய காவியம்.
- விடயம் :- காவியம்.
- நூலாசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- வெளியீடு :- உமர்நெய்னார் புலவர் கழகம், மூதூர்.
- முதற் பதிப்பு :- ஏப்ரல் 2019
- பிரதிகள் :- 500
- விலை :- 250/=
- ISBN :- 978 - 955 - 44598 – 5 - 4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவரின் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராண உரை (மறுபதிப்பு)
4. மனிதம் (கவிதை)
5. ஊர் துறந்த காவியம்.
6. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்.
7. அன்பின் மகனுக்கு. (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்.
9. நாயகக் காவியம். (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள். (காத்தான்குடி பள்ளி வாயல்கள் சங்கங்களின் சம்மேளன விருது பெற்றது)
11. மழலைக் கீதம்.
12. அஸ்ரஃப் அமரகாவியம்.
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
14. யதார்த்தம் (கவிதை)
15. கவிஞர் மூதூர் எஸ். எல்.எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் - ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்- ஆய்வு.
17. எந்தன் ஊரே! (கவிதை)
18. வசந்தம் (கவிதை)
19. நண்பனை நவிலும் நா (கவிதை)
20. தங்கத்துரைக் காவியம்.
21. மஜீது மாகாவியம்.
22. அமீன் அருங்காவியம்.
23. மனையாள் மாட்சிமைக் காவியம்
24. மூதூர் முன்னேற்றக் காவியம்
25. மூதூர் சுனாமிக் காவியம்
26. கவிஞர். மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்
27. மூதூர். எம்.எம்.ஏ. அனஸின் நன்னெறிக் குறள்
28. சிறுவர் கவிப்பேழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

சுமார் ஆயிரக்கணக்கான மூதூர் மக்களுக்கு தன்னுடை அமைச்சுச் செயலாளர் பதவியின் ஊடாகப் பல்வேறுபட்ட உதவிகளைச் செய்தவரும், மூதூர் படகு விபத்து நிகழ்ந்த மறுநாள் அன்றைய ஜனாதிபதி அதிமேதகு ரனசிங்க பிரமதாச அவர்களின் பிரதிநிதியாக மூதூருக்கு வருகை தந்து, மூதூர் மக்களின் கடற்பயண அவலங்களை நேரடியாக அறிந்து சென்று மூதூர் படகு விபத்து பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வழிவகுத்தவரும், மூதூர் மண்ணின் மீதும் மக்கள் மீதும் மாபெரும் பற்றுக் கொண்டவருமான, அன்றைய பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராய் இருந்த கண்ணியத்துக்குரிய அல்ஹாஜ். எம்.என். ஜுனைதீது அவர்கட்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மூதூர் நீர்வளமும், நிலவளமும் நிறைந்த ஊர், மகாவலி கங்கை நதி பல கிளைகளாகப் பிரிந்தோடி மூதூர் மண்ணை முத்தமிட்டு ஈற்றில் அம்மூதூர்க் கடலிலேயே சங்கமமாகின்றது.

தமிழ் அறிஞர் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் "மாவலியின் பெயரால் விளங்கும் மணித்திருநாடு" என்று பாடியது கூட தனது ஊரான மூதூரைப் பற்றித்தான் என்று மூதூரின் மறைந்த மாபெரும் எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இதே போலத்தான் மூதூரின் வளத்தையும், வனப்பையும் பாடிய மூதூர் உமர்நெய்னார் புலவர் "புவியினில் விளங்கும் மூதூரெனும் பதி பொங்குநதி பாய்வதனாலெங்கும் வளமாகி கவினொழுகு செந்நெலொடு கன்னலுமலிந்து காட்சி தருகின்ற திருமாட்சி பெறுநாடு" எனப் பாடினார். ஆம் வளமும் வனப்பும் மிகுந்த மூதூர்ப் பிரதேசம் போக்குவரத்து வசதியற்ற ஓர் பிரதேசமாகச் சித்தரிக்கப்பட்டது. செயற்திறனும், ஆற்றலும் மிக்க ஓர் தலைமைத்துவம் மூதூருக்கு இருந்திருந்தால் மூதூரில் போக்குவரத்துப் பிரச்சினை என்ற ஓர் விடயம் இருந்திருக்க மாட்டாது. மாறாக மூதூரின் தலைவிதியோ அல்லது சாபக்கேடோ! மூதூருக்கான ஓர் அரசியல் தலைமைத்துவம் இல்லாமலே இருந்து கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மூதூர் மக்கள் அன்று தங்களுடைய பிரயாணக் கஷ்டம் தாங்க முடியாத உச்சக்கட்டத்திலே மன வேதனையுடன் கூறுவார்கள். "இந்நாட்டிலே எவ்வளவோ ஊர்கள் இருக்கையிலே ஏன் தான் எங்கள் முன்னோர்கள் மூதூரில் வந்து குடியேறினார்கள், அவர்கள் இங்கு வந்து குடியேறியே இருக்கக் கூடாது" என்பதாக.

ஆனால் இப்போது தான் உணர்கின்றோம் சுவாமி விபுலானந்தரும், மூதூர் புலவர் உமர்நெய்னாரும் புகழ்ந்து பாடிய படி மூதூர் பிரதேசம் இந்நாட்டிலேயுள்ள ஏனைய ஊர்களை விட இயற்கை வளங்கள் மிகையாக நிறைந்த ஓர் ஊராகும் என்பதை.

இந்நாட்டிலே பயங்கரவாதம் முற்றாக முடிவுக்குக் கொண்டுவரப் பட்டதன் பின்பு கடந்த அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை – மட்டக்களப்பு பயணப் பாதையை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட உப்பாற்றுப் பாலம், கங்கைப் பாலம், இறால்குழி பாலம் இவைகள் மூலமாக இன்று இந்நாட்டில் அதிக போக்குவரத்து வசதிகள் நிறைந்த ஊராக மூதூர் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இவற்றை நினைக்கும் போதெல்லாம், இவ்வேலைத் திட்டத்தின் பிதாமகன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மூதூர் மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூறக் கடமைப் பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளம் சிறுவர்களுக்கு மூதூர் மக்களாகிய நாங்கள் அன்று, திருகோணமலைக்குச் செல்வதாக இருந்தால், சிறிய லோஞ்சு மூலம் எட்டு மைல்கள் தூரத்தை கொட்டியாரக்கடலில் கடந்துதான் செல்வது என்று சொன்னால் அவர்கள் நம்பக்கூடிய நிலையில் இல்லை, காரணம் பாலங்கள் அமைக்கப்பட்டு தரைவழிப் பயணமே இருப்பதால் கடல்வழிப் பயணம் என்பது அவர்களுக்கு வியப்பாகவே உள்ளது.

எனினும் கடந்த 25.01.1993ம் ஆண்டு சுமார் இருபத்தாறு வருடங்களுக்கு முன்பு மூதூர்க்கடலில் இடம்பெற்ற படகு விபத்து, மூதூரின் ஓர் வரலாற்று நிகழ்வாக பதிவாகிவிட்டது. இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும் மூதூரின் வரலாற்றை ஆராய்கின்ற வரலாற்று ஆசிரியர்களுக்கும், வரலாற்று ஆராய்ச்சி மாணவர்களுக்கும் எனது " படகு மூழ்கிய காவியம்" எனும் இக்காவிய நூல் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு. அக்காலத்தில் இவ்வரலாற்றாளர்கள் இக்காவியத்தை எழுதிய என்னை நன்றியறிதலோடு நோக்குவார்கள் என்றும் நம்புகின்றேன்.

நன்றி.

எம்.எம்.ஏ.அனஸ்
05.04.2019

மட்டக்களப்பு வீதி, பெரியபாலம், மூதூர் – 05.
தொடர்பு – 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு மூழ்கிய காவியம்

## இறைஞ்சல்

மூதூர்க் கடலில் படகதுவும்
மூழ்கி மக்கள் மாய்ந்ததனை
ஏதோ ஆயிரம் ஆண்டின்பினும்
எங்கள் சந்ததி அறிவதற்கு
ஈதோ நானும் இந்நிகழ்வை
இனிதாம் காவியம் என்றேதான்
ஓத வழியும் செய்கின்றேன்
உதவ இறையைக் கேட்கின்றேன்.

இறைவா படகும் மூழ்கியதை
இன்னரும் காவியம் என்றே தான்
முறையாய் யானும் யாப்பதற்கு
முற்றாய் நீயும் உதவிடுவாய்
குறையே இல்லா முறையினிலே
குறித்த காவியம் அமைவதற்க்கு
நிறைவாய்த் தமிழை என்நெஞ்சில்
நீயும் நன்கே நிறைத்திடுவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

ஆழ்கடலில் படகன்று ஆழ்ந்ததனால் மூதூர்
அடைந்திட்ட அவலங்கள் அனைத்தையுமே தமிழில்
வாழ்கின்ற காவியமாய் வடித்திடவே எனக்கு
வரமாகத் தமிழதனை வழங்கிடுவாய் இறையே!

பாதாள மலையருகே படகதுவும் மூழ்கிப்
பலியான எம்மோரின் பரிதாபம் பாட
பூதளமே படைத்தாளும் பெரியோனே அல்லாஹ்
பெருங்கடலாய்த் தமிழ்எனக்குப் பேறாகத் தருவாய்.

செந்தமிழை என்னாவில் சமுத்திரமாய் ஆக்கி
சிறந்தகவி நான்படைக்கச் செய்வாயே! அல்லாஹ்
உந்தனது அருளின்றி ஓர்வரியும் என்னால்
ஒழுங்காக எழுதிடவே ஒருபோதும் முடியா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவையடக்கம்

காவியங்கள் மூதூரில் காத்திரமாய் யாத்த
கனத்தபுகழ் புலவர் உமர் நெய்னாருடன் சாலயர்
பாவலராய் அவர்தம்பரம் பரையில்வந் தபரீத்
போன்றோரிருக் கயான்பாடல் புதினமிகு செயலே.

சின்னஞ்சிறி யோன்நானோ சிறப்பாய்த்தமிழ் அறியேன்
சிந்தையதன் உந்துதலால் சரித்திரத்து நிகழ்வை
என்னதற்காய்க் காவியமாய் எழுதிடத்தான் துணிந்தேன்
என்இயலாத் தன்மைதனை எண்ணியேநா ணுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர் வாழ்த்து

மாவலியின் தழுவலினால் மண்செழுமை யுற்று
மாபெரிய வளத்துடனே மிளிருமூர்தான் மூதூர்
ஆவலினைத் தன்மீதில் அனைவருமே கொள்ள
அழகேதான் பெற்றிலங்கும் அருமையூர் இதுவே.

நீர்வளமும் நிலவளமும் நன்கமைந்து இந்த
நாட்டினிலே செழுமைமிகு நகரென்றே திகழும்
பேர்பெற்ற மூதூரின் பெருமைக்கு இறையின்
பெருங்கொடையே காரணமாம் புரிவோமே நாமும்.

முக்கனியும் செந்நெல்லும் மிகையாக விளையும்
மூத்தபதி மூதூரின் மகிமையதோ மிகைத்து
எக்குறையும் இல்லாது ஏற்றமெல்லாம் நிறைந்த
எழிலூராய்த் திகழுவதை எல்லோரும் புரிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சார்ந்த நெய்தல்நிலக் கனத்தழகு ஓர்பால்
களிப்புமிகு முல்லைநிலக் காட்சிகளும் ஓர்பால்
நெடுமலையின் குறிஞ்சிநிலம் நின்றிலங்கும் ஓர்பால்
நீண்டவெளி மருதநில நெல்வயலும் ஓர்பால்.

நானிலத்து நான்குநிலம் நல்லெழிலை நல்க
நல்வளத்து மிகுதியிலே நின்றிலங்கும் மூதூர்
ஆனபெரும் இயற்கைவளம் அமைந்தபதி மூதூர்
அகிலத்தில் இப்பதியை அரும்பதியே என்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு

கடலினில் படகு மூழ்கி
கனத்ததாம் உயிரை மாய்த்த
விடயமா மதனை யானும்
வையகம் மீதில் வாழும்
நெடிதோர் காவிய மாக
நவின்றிடும் போதில் ஆங்கே
வடுவெனப் பிழைகள் தோன்றா
வனப்புற இறையே காப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியம்

பாதைகளில் பயணங்கள் பல்திக்கும் நிகழும்
புதிதல்ல இவ்விடயம் புரிவோமே நாமும்
காதைகளில் நாங்களுமே காண்கின்ற பயணம்
கடற்பயணம் அதுமூதூர்க் கண்ணீரின் பயணம்.

எட்டுமைல்கள் தூரத்தை எம்மூதூர் மக்கள்
ஏராளச் சிரமமுடன் எதிர்நோக்கி வந்தார்
பட்டதுயர் பயணத்தைப் பகரவுமே ஒண்ணா!
பயணத்தில் இதுவே தான் பெரும்கஷ்டம் புவியில்

தொட்டதுயர் மூதூர்க்குத் தொலையாதோ கடலில்
தொடர்கின்ற பயணமெனத் தேர்ந்துரைப்பர் மக்கள்
நட்டநடுக் கடலினிலே நாளாந்தம் துயரில்
நல்லுதவி நல்கிடவே நாயனைக்கேட் டிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தையெனும் மரக்கப்பல் வழியாயும் கடலில்
வியாபாரப் பொருட்களதும் வந்ததுவே ஊர்க்கு
இத்தகைய பயணங்கள் இருந்ததுவே முன்பு
இன்றில்லை இப்பயணம் இதிகாசம் ஆகும்.

இலங்கையெனும் திருநாட்டில் இருக்கின்ற ஊரினில்
இன்னல்மிகு பயணத்தின் இருப்பிடமே மூதூர்
பலநாட்கள் தொடராகப் படகின்றி மக்கள்
பயணங்கள் தடையாகி பரிதவித்தும் நிற்பர்.

பிறஊரினில் இருந்தெல்லாம் பலமணிப்பய ணத்தில்
பக்கத்தூர் திருமலைக்குப் பாங்காக வரலாம்
திருமலையில் இருந்தூர்க்குத் திரும்புதலோ கஷ்டம்
தினங்கள்பல ஆகிட்ட துயரமதும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகதனின் பயணமதோ பேரின்னல் தானே!
பழுதாயின் பலநாட்கள் பயணமதும் தடையே!
படகுக்காய்ப் பயணிகளும் பலமணிகள் காத்துப்
படுகின்ற கஷ்டமதைப் பகன்றிடவும் முடியா.

பயணிகளோ அதிகமெனில் பயணிக்க முடியா
பாதைவழிப் பயணமதும் பேரிடரே ஆகும்.
பயணமதோ கந்தளாயின் பாதைவழி ஆயின்
பயங்கரவா திகளினது பாதகமும் நேரும்.

வன்செயலும் வந்தேதான் வாட்டிடவே மூதூர்
வாழ்மக்கள் பயணத்தின் வழியெல்லாம் கடலே
என்றாகி விட்டதனால் ஏராளக் கஷ்டம்
ஏற்றிட்டார் பயணத்தில் என்பதுவும் புரிவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர்கள் குடியாக மூதூரேன் ஆனார்
முழுக்கஷ்டம் பயணத்தில் முடிவின்றி உளதே!
என்றெல்லாம் கதைப்பார்கள் எம்மோர்கள் தினமும்
எல்லாமும் கடற்பயண ஏக்கத்தால் தானே!

வங்கக்கட லின்வளைந்த விரிகுடாவின் மீதில்
விரிந்தபெரும் பரப்பினிலே விழுந்தோங்கும் அலையில்
அங்குமிங்கும் படகதுவும் அலைந்தபடி செல்லும்
ஆபத்தின் இருப்பிடமாய் அப்படகும் ஆகும்.

காற்றாங்கே வீசிவரும் கடலலையும் உயரும்
கடலுக்குள் மூழ்குவதாய்க் காட்சிதரும் படகும்
ஆற்றாது பயணிகளோ ஆண்டவனை அழைப்பர்
ஆபத்தின் அடிப்படையாய் அமைந்திடுமே பயணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகதுவும் ஊஞ்சலெனப் பயணத்தில் ஆடப்
பலம்குன்றித் தலைசுற்றிப் பலரெடுப்பார் வாந்தி
இடரேதான் நிறைந்திட்ட இன்னல்மிகு பயணம்
இந்நாட்டில் உளதென்றால் இவ்வூரில் தானே!

சிலநேரம் படகதுவும் செயலிழந்த நிலைக்குச்
சென்றிடுமே நடுக்கடலில் செய்வதுமே அறியா
பலமணியின் நேரங்கள் பெருந்துயரில் தவிப்பர்
பயணத்தில் தொடர்கதையாய் பெரிதிதுதான் நிகழும்

வரலாற்றுக் காலம்முதல் விளங்கும்கடற் பயணம்
விந்தைமிகு பயணமென விளங்கிடுவோம் நாமும்
சிரமமேதான் நிறைந்திட்ட சீர்மையிலாப் பயணம்
சிந்தையுமே நடுங்கிறதே செப்புகையில் இதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தின் கஷ்டத்தைப் போக்கிடவே மக்கள்
பக்கமுளோர் பார்த்தேதான் பலகதையும் கதைப்பர்
பயமதுவும் இதனாலே பெருமளவில் குறையும்
பாவமே பயணிகட்கு பயணமிதால் என்போம்.

பயணமேதான் செய்வதெனில் பலமணிகள் முந்தி
பயணிக்கும் ஜெற்றிதனைப் போய்ச்சேர வேண்டும்
பயணிகளும் அதிகமெனில் பயணிக்கும் வாய்ப்பு
பயனின்றிப் போய்விடுமே பரிதாபம் அம்மா!

போதுமே ஆட்கள்இனிப் போகவுமே முடியா
பொலிசாரும் இவ்வாறு பகருகையில் ஆங்கே
வாதமுடன் சண்டைகளும் வருவதும் உண்டு
வேதனைகள் பலநிறைந்த வியப்புமிகு பயணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகுகளும் பழுதென்று பகர்கின்ற போதில்
பலநாட்கள் தடையாகிப் பயணமது போகும்
இடரேதான் நிறைந்திட்ட இப்பயணப் பாதை
இலங்கையிலே வேறெங்கும் இல்லையேதான் என்போம்.

பயணத்தில் ஈடுபடும் படகுகளோ இங்கு
பழமைமிகு பழுதுற்ற படகுகளே புரிவோம்
இயந்திரமும் கோளாராய் இருக்கிறதே என்று
இயம்பிடுவார் படகோட்டி இச்சேதி கேட்போம்.

நன்றான இயந்திரமும் நிறைந்தபட கில்லை
நவீனமிகு வசதிகளும் நன்கமைந்து மில்லை.
என்றுமேதான் குறைபாடு ஏராளம் கொண்ட
ஏற்றமிலாப் படகேதான் எம்பயணப் படகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க எம்.பீ.மார் அதிகாரி என்று
அத்தனைபேர் இடத்தினிலும் அறைந்தும்பயன் இல்லை
சிரமத்தின் மத்தியிலே சிறுபடகுப் பயணம்
சிந்தையுமே குழம்பிறது செப்புகையில் இதனை.

கங்கையுடன் உப்பாறு காண்பாலம் ஏதும்
கட்டிடவே இல்லையதன் காரணத்தால் மக்கள்
பங்கமிகு சிறுபோட்டில் பயணமது செய்து
பக்கத்தூர் கிண்ணியாக்குப் போய்வருதல் உண்டு

கங்கைக்கடல் அருகினிலே கனதடவை போட்டும்
கடலுக்குள் மூழ்கிட்ட கதைகளுமே உண்டு.
எங்கள்உற வார்கள்பலர் ஏற்றவுயிர் துறந்த
ஏராளக் கடல்அனர்த்தம் எம்மிடையே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்பயண ஊர்என்னும் காரணமாய் மக்கள்
காண்பதற்கும் மூதூரைக் கடுமச்சம் கொள்வர்
இடர்மிக்க பயணத்தின் இருப்பிடமாய் ஆன
இடம்வேறு இங்கில்லை இயம்பிடுவோம் நாமும்.

## வேறு

புவியில் உள்ள ஊர்களிலே
போக்கு வரத்துக் கஷ்டத்தால்
தவியாய் மக்கள் தவிர்த்திட்ட
தனிப்பெரும் ஊர்தான் மூதூராம்.

கொட்டி யாரக் கடலினிலே
கனத்த இன்னல் பயணத்தில்
பட்ட கஷ்டம் மூதூரார்
பகர யார்க்கும் முடியாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு மைல்கள் தூரத்தே
எழிலாய் அமைந்த திருமலையை
கொட்டி யார மக்கள்செலக்
கனத்த கஷ்டம் அடைந்தனரே!

ஏன்தான் எங்கள் முன்னோர்கள்
ஏற்ற ஊரென மூதூரில்
ஆன்றோர் குடியாய் ஆனாரென
அகமே நொந்து வருந்தினரே!

கனத்த நேரம் படகுக்காய்
கால்கள் கடுக்கத் துறைமுகத்தில்
மனதில் சோகச் சுமையுடனே
மக்கள் காத்தும் நின்றனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயண மக்கள் மிகைத்திடிலோ
படகுப் பயண வாய்ப்பில்லா
துயர நிகழ்வும் நிகழ்ந்திடுமே!
துன்பம் நல்கி நின்றிடுமே!

இரண்டு மூன்று தினங்கூட
இந்தப் பயண வாய்ப்பின்றி
பெரிதும் மக்கள் வாடினரே!
பொழுதை வீணாய்க் கடத்தினரே!

கடலின் பயண வேளையிலே
காற்றுக் கடலின் தாக்கத்தால்
படகும் அலையில் அலைகையிலே
பயந்து மக்களும் அழுதிடுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் அலையும் உயர்ந்துவர
கனமாய்ப் படகும் புரண்டுவிழ
உடனே இறையை மக்களுமே
உயிரைக் காக்க இறைஞ்சிடுவர்.

இருபத் தைந்து தைமாதம்
இரண்டா யிரமாண் டில்ஏழு (1993)
வருடம் முன்பாய் படகுவிபத்து
வேதனை ஊரில் நிகழ்ந்ததுவே

நிரந்தரக் கவலை தனைஎமக்கு
நாளும் இதுவும் தருகிறதே
மறக்க முடியா நிகழ்வாயும்
மனதில் பதிந்தும் உள்ளதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினத்துப் பிற்பகலில்
அதன்நே ரம்மூன் றையமுக்கால் (3.45)
சென்றது படகும் மூதூரைச்
சென்றே அடையும் நோக்கினிலே

பாதா ளமலையின் கடல்அருகில்
படகும் வந்த போதினிலே
ஈதோ! இந்தத் தருணத்தில்
இந்தப் படகும் மூழ்கியதே!

படகதும் மூழ்கிப் போனஇந்த
பாதா ளமலைக் கடல்தன்னின்
இடமோ நானூ(று) தொடக்கமது
இருநா நூறு மீட்டராழமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கிய படகோ ரீபிசீ (TPC)
நூற்றிப் பதின்ஏ ழுஎன்கின்ற (117)
பாழ்படு பழமைப் படகாகும்
பெயரோ "சார்ட்டர்" என அழைப்பர்.

பாரிய அலையும் அவ்வேளை
படகைத் தாக்கி நின்றதனால்
நீரில் கவிழ்ந்த படகதும்
நீருள் மூழ்கிப் போயினவே!

பயணம் செய்த பயணிகளில்
பலபேர் படகை விட்டகன்று
உயிரைக் காக்கக் கடல்குதித்தார்
உரிய மிதவையால் தப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் கரையை நோக்கியுமே
கனபேர் நீந்தத் தொடங்கிட்டார்
உடனே கிண்ணியா மீனவர்கள்
உயிர்களை ஆங்கே காத்திட்டார்.

கனபேர் நீந்த முடியாமல்
கடலில் தவித்தே இறந்திட்டார்
சனங்களும் அதிகம் படகுக்குள்
சிக்கிக் கடலுள் அமிழ்ந்திட்டார்.

மொத்தம் நூற்றி இருபதுக்கும்
மேலாம் நபர்கள் பயணத்தில்
இத்தகு படகில் பயணித்தார்
இறந்தோர் தப்பியோர் இதிலடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாப்பத் தெட்டு நபர்கள்தான்
நடுக்கடல் விபத்தாம் இதிலிருந்து
காப்பாற் றப்பட் டிட்டிட்டார்
கணக்கிட் டறிந்தோம் இவைகளினை.

மரணம் உற்ற நபர்களிலே
மொத்தம் பதின்மூன் றுபேர்களது
இறந்த சடலம் தனை மீட்டு
இறந்தோர் உறவார் அடக்கிட்டார்.

கடலில் மூழ்கி மரணித்த
கணக்கில் நாப்பத் தாறுபேர்தம்
உடலினைத் தானும் பெறவில்லையே!
உறவார் கலங்கி அழுதனரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தோர் உடலை மீட்பதற்காய்
இளைஞர் மீனோர் படகினிலே
இரவும் பகலும் தேடினரே!
ஈர்இரு நாட்கள் முயன்றனரே!

கடற்படை யினரும் கடலினிலே
கடுமை முயற்சி செய்தேதான்
உடலம் தன்னைத் தேடினரே!
ஒன்றும் காணாத் திகைத்தனரே!

கிண்ணியா மீன்பிடிப் படகுகளும்
கண்டே மீட்கச் சடலங்களை
நன்றே கடலில் தேடினவே!
நரர்தம் சடலம் கிடைக்கலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தோர் உடலைக் கரைசேர்க்கும்
இனிதாம் பண்பைக் கடலதுவும்
மறந்தே அன்று போயினவே!
மாயமாய்ச் சடலமும் மறைந்ததுவே!

கடலில் கூடக் கபுறுண்டோ!
காணா நாப்பத் தாறுபேரின்
உடலம் யாவும் அங்கேதான்
உரிய முறைப்படி அடங்கினவோ!

எல்லாம் ஏகன் செயலேதான்
ஏது செய்வோம் நாமென்றே!
சொல்லி உறவார் அழுதனரே!
சொந்தத் தாரின் பிரிவெண்ணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களர் தமிழர் முஸ்லிமெனச்
சிறிதும் பேதம் இல்லாமல்
பொங்கிய மனித உணர்வோடு
பொதுமக் கள்ஒன்(று) கூடினரே!

மூவின மக்களும் விபத்தினிலே
மூழ்கி மாய்ந்து போனதனால்
நோவினை கொண்டே எல்லோரும்
நேசம் மிகைக்கப் பழகினரே!

மூதூர் கடற்கரைப் பகுதியிலே
முஸ்லிம் தமிழர் என்றின்றி
ஏதோ ஆழ்ந்தோர் எல்லோரும்
எங்கள் உறவென எண்ணினரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் முஸ்லிம் ஒற்றுமைகள்
தனிப்பெரும் உச்சம் அடைந்திட்ட
இமயத் தினமாய் இத்தினத்தை
இனிதே என்றும் இயம்பிடுவோம்.

மூதூர்க் கடலின் கடற்கரையில்
மக்களும் அன்று குவிந்தனரே!
ஏதோ! சடலமும் வருமென்று
ஏங்கி அழுதும் நின்றனரே!

உயிராய்க் கூடத் தம்உறவார்
உயரிறை அருளால் வந்திடுவர்
வியந்தே கடலைப் பார்த்தபடி
வருந்திக் கூறிக் கரைநின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றைத் தினத்தில் கடற்கரையில்
அருமை உறவார் எல்லோரும்
பற்றாய்க் கடலைப் பார்த்தபடி
படுத்தே கண்கள் விழித்திருந்தார்.

மறுநாள் பொழுதும் சடலங்கள்
மீட்கக் கடலில் முயன்றார்கள்
ஒருவர் உடலும் காணாமல்
உள்ளம் உடைந்து போனார்கள்.

மூதூர்க் கடலில் ஒருபோதும்
மூழ்கிப் படகு போகலையே!
ஏதோ! இன்று மூழ்கிட்டே!
எல்லாம் நடந்து போயிற்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயம் ஒன்று நிகழ்ந்திட்ட
அதிர்ச்சியில் இருந்தே மீளாமல்
பதியில் மக்கள் எல்லோரும்
பெரிதாம் சோகம் அடைந்திட்டார்.

படகில் மூழ்கி மரணித்த
பலபேர் தன்னின் நினைவுகளோ!
கடந்தும் காலம் மறையாமல்
கனமாய் உளத்தில் வருகிறதே!

முகம்மது மன்சூர் றெசீனென்னும்
மேலாம் ஆசான் அவர்தம்மை
அகத்தை விட்டு மூதூரும்
அகற்றா தென்றும் அறிவோமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர வகுப்பு விஞ்ஞானம்
உன்னத கல்வியைக் கதைக்கையிலே
உயர்வாய் றெசினவர் நினைவேதான்
ஊரினில் தோன்றும் ஊற்றாக.

ஊரின் உயர்வை நேசித்த
உன்னத வாத்தி றெசினவரும்
ஊரின் நேசம் என்றானார்
உண்மை இதனை உணர்வோமே.

காமிது மனேஜர் என்கின்ற
கவினுறு பெரியார் தோற்றமதும்
ஆமாம் எமது நெஞ்சினிலே
அழியா தின்றும் இருக்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருத் தொப்பி அணிந்தேதான்
நேர்த்தி யாக உடையுடுத்தி
பாரு என்றே எமைத்தூண்டும்
பாங்கே காமிது மனேஜுரவர்.

ஆணைச் சேனைப் பகுதிக்கு
அவரோ பெரிய வரமாகும்.
காண விருத்தியை அப்பகுதி
கனமாய்ச் சேவை செய்திட்டார்.

அடக்கம் அமைதியின் உருவென்றே
ஆன மௌலவி ஜவாத் ஆசான்
திடமாய் எங்கள் நெஞ்சினிலே
தினமும் தழைத்தே ஓங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகப் படிப்பிற்காய்ப்
பாதம் பதித்த புவாத் என்னும்
நல்லோர் இளைஞன் அவன் நினைவு
நாளும் நெஞ்சில் நிறைகிறதே!

தோப்பூர் வீடமைப் பதிகாரி
தங்கக் குணத்தோன் குதாநினைவும்
தோப்பாய் எம்மில் தழைக்கிறதே!
தினமும் நினைவாய் வருகிறதே!

அப்துல் றஹீம்முஸ் தக்கீன்எனும்
ஆணைச் சேனை அவருமேதான்
இப்பட குவிபத் தில்தன்னுடை
இன்னயிர் துறந்ததை யுமறிவோமே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புனித குர்ஆன் மனனமானவன்
பெரிய பாலம் புகாரி
இனிதாம் உயிரை இழந்ததுவும்
இந்தப் படகு விபத்தினில்தான்.

அதிபர், ஆசான் தோப்பூரின்
அமானுல் லாஹ்அவர் நினைவும்
பதியில் என்றும் மறையாதே!
பாங்காய் நினைவில் நிலைப்பாரே!

உதைப்பந் தாட்ட வீரனவன்
உயரிய புகழின் சேகலாவுதீன்
அதேபட கினிலே மூழ்கிட்டார்.
அவரையும் நாமும் மறவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர்ப் படகு விபத்தினிலே
மூழ்கி உயிரைத் துறந்தவர்கள்
ஈதோ எங்கள் இதயத்தில்
இருக்கின் றார்கள் நிரந்தரமாய்.

அகிலே சப்பிள் ளைராசமணி
அன்னவர் கூட்டுற வுச்சங்க
உகந்ததோர் உத்தியோ கத்தராவார்
உயிரினை அவருமே இழந்தாரிதில்.

பொதுமுகா மையாளராம் கூட்டுறவின்
பண்புமிகு லாபீர் அன்னவரும்
இதேபட கினில்த்தான் தன்னுயிரை
இழந்தும் போனார் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் வசந்த குமாரியெனும்
சிறப்புறு ஆசிரி யையும்படகில்
தம்முயிர் துறந்து போனதையும்
தரணியும் மறவா தம்மா!

வைத்திய சாலை மூதூரில்
வேலையே புரிந்தசே னையூர் வசந்தி
உத்தமி சந்திர ஜோதியிவரும்
உயிரினை இழந்ததும் படகினில்தான்.

இல்லறம் தன்னில் நல்லதொரு
இலட்சிய மாதாம் சேனையூரின்
நல்லறத் தங்கரத் தினம்தன்னுயிர்
நீத்ததும் இப்பட(கு) விபத்தினில்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகு மூழ்கிய செய்தியது
பரவி நாட்டில் சோகத்தை
அடையச் செய்த காரணமாய்
அனைவரும் அதனை ஆய்ந்தனரே!

அன்றைய வானொலி, பத்திரிகை
அனைத்தும் தலைப்புச் செய்தியென
இன்னலின் படகு விபத்தைத்தான்
இயம்பி அதிகம் நின்றனவே!

அன்று நாட்டின் ஜனாதிபதி
ஆகிய அதிபர் பிரமதாச
நன்றாம் தீர்வைக் காண்பதற்கு
நாட்டம் மிகைத்துச் செயற்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடை பிரதி நிதியென்று
தரமுயர் பொதுநிர் வாகத்தின்
அன்றைய அமைச்சுச் செயலாளர்
ஆன ஜுனையிதை மூதூர்க்கனுப் (பிட்டார்)

படகும் மூழ்கிய மறுநாளே
பெரும்செயல் வீரர் ஜுனையிதவர்
இடமாம் மூதூர் வந்திட்டார்
இன்னலின் மக்களை அணுகிட்டார்.

மூதூர் மக்களின் நலன்தன்னில்
மேலாம் அக்கறை கொண்டவராய்
ஏதோ! இவரும் இருந்திட்டார்
ஏற்றம் மூதூர்க் காகிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் மக்களின் மேன்மைக்காய்
முயன்று சேவைகள் செய்திட்ட
மாதவப் பெரியார் அக்பர்தனின்
மேலாம் நண்பர் ஜுனைத்ஆவார்.

இதனால் மூதூர் மக்களுக்கு
இயன்ற அளவு சேவைகளை
இதயம் உவந்தே ஜுனையிதவர்
இதமாய் என்றும் செய்திட்டார்.

உன்னத மனிதர் ஜுனையிதினை
உணர்ந்த மூதூர் மக்களெலாம்
அன்னவர் வருகை ஊருக்கு
அரும்பெரும் நன்மை என்றனரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னலில் இருந்த மூதூரும்
இவரைக் கண்டதும் மகிழ்ந்ததுவே!
துன்பம் துயரம் நீங்குதற்கு
துணையென இவரை ஏற்றனரே!

கதிரவன் கண்ட கமலமென
கண்ணியோன் ஜுனையிதைக் கண்டவுடன்
அதிசய நிலைக்கு அவர்பின்னே
அணியாய்த் திரண்டது மூதூரும்.

வாடிய பயிர்க்கு வான்மழை போல்
வந்தார் ஜுனையிதும் மூதூர்க்கு
வாடிய மக்கள் மனமெல்லாம்
வசந்தம் இவரால் கண்டதுவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் பயணம் காரணமாய்
கனத்த இன்னலை மூதூரும்
படுகின்ற நிலையை நேரடியாய்ப்
பார்த்தே அவரும் அறிந்திட்டார்.

நாட்டின் ஜனாதிபதி திக்கவரும்
நாளும் மூதூர் மக்களினை
வாட்டிடும் கடலின் பயணத்தை
விளக்கிக் கூறி ஜெயித்திட்டார்.

ஈற்றில் ஜனாதிப தியாணைக்குழு(வை)
இதற்காய் அமைக்க வகை செய்தார்
ஆற்றல் படைத்த ஜீனைதவரால்
ஆறுதல் கண்டது மூதூரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக் குழுவின் ஆணையாளர்
ஆக ஓய்வுபெற் றநீதிபதி
ஆன ஜி.எல்.எம்.டி சில்வாவும்
அதன் செய லரெம்.சீ. இக்பாலுமா(வார்)

மூதூர் திருமலைப் பகுதிக்கெலாம்
முறையாய் ஆணைக் குழுவதுவும்
பாதம் பதித்தே படகதனின்
பயணப் பாதையும் பார்த்தனவே!

திருமலை மூதூர் கொழும்பினிலே
திருப்தி யாக மக்களது
கருத்தினைக் கேட்டும் ஆணைக்குழு
காத்திர முடிவை எடுத்ததுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை மூதூர்ப் படகதனின்
திரைகடல் பயணப் பாதையையும்
திறன்படப் பார்த்தே ஆணைக்குழு
தீர்க்க முடிவும் கண்டதுவே.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக
மூதூர் படகு விபத்துபற்றி
அஷ்ரஃப் அவரின் பணிப்புரைக்கு
அமையச் சான்றும் கொடுபட்டது.

சான்று அளிக்கும் குழுவிற்கு
சட்டத் தரணி அபுல்கலாமே
ஊன்று கோலாய் இருந்திட்டார்
உன்னத தலைமை தந்திட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குழுவில் அனஸ்யானும்
அங்கம் வகித்துச் சென்றிட்டேன்
இந்தச் சான்றைக் கொழும்பினிலே
இவ்வா ணைக்குழு விற்களித்தோம்.

திருமலை மூதூர் பயணத்தில்
தரமே அற்ற பழமைமிகு
குறைகள் மிகுபட கதனால்த்தான்
குறித்த விபத்தும் நடந்துள்ளது.

நவீன வசதிகள் நிறைந்திட்ட
நன்றாம் படகுகள் இரண்டேனும்
அவசியம் மூதூர் பயணத்திற்(கென)
ஆணைக் குழுவும் கூறியதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் படகில் மேலதிக
ஆட்களை ஏற்றலும் கூடாதென
இத்தகு விதப்புரை தனையும்தான்
இவ்வா ணைக்குழு செய்ததுவே.

விபத்தும் நிகழ்ந்து முடிந்தபினே
விரைந்து மூதூர் கூட்டுறவுச் (சங்கம்)
உபகா ரநோக்கில் படகொன்றை
உடைமையாய் வாங்கிக் கொண்டதுவே

மாதுமை என்னும் இப்படகு
மூதூர் திருமலைப் பயணத்தில்
ஏதோ அன்று மக்களுக்கு
எழிலைக் கொஞ்சம் கொடுத்ததுவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு வரத்துச் சபைமூதூர்(ரும்)
படகு ஒன்றையும் பயணக்குறை
போக்கிட மூதூர் திருமலைக்கடல்
பயணம் தன்னில் இணைத்ததுவே.

இதன்பின் அஷ்ர.ஃப் அமைச்சரென
இலங்கைத் துறைமுகத் திற்காகிட
அதனைச் சாதகம் எனக்கொண்டு
அனஸ்யான் முயற்சிகள் செய்திட்டேன்.

இதன்பயன ாய்த்திரு மலைத்துறைமுகத்(தில்)
இருந்த மகாவலிப் படகதனை
இதமாய் மூதூர்ப் பயணத்தில்
இருத்திட யானும் வகை செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் இந்த முயற்சிதனை
ஏற்றம் என்றே ஊர்உணர
வந்த பத்திரி(கைச்) செய்திதனை
வாசித் தறியக் கோருகிறேன்.

இதற்காய் இந்தச் செய்திதனை
இவ்வரும் காவியம் முடிவினிலே
உதவும் என்றே உணர்ந்ததனை
உரிய படியே தந்துள்ளேன்.

காலமும் மாறிப் போயினவே
கஷ்டமும் நீங்கிப் போயினவே!
பாலம் அமைந்து தரைவழியில்
பாதையும் அமையப் பெற்றனவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கர வாதம் அழிந்ததனால்
பயணப் பாதையில் புதுமாற்றம்
உயரிய தரைவழிப் பயணமது
ஊரில் உதயம் ஆகியதே!

எல்லா சோக நிகழ்விற்கும்
ஏற்ற தீர்வைக் காண்பதற்காய்
வல்லமை மிக்க மகிந்தையினால்
வழியும் பிறந்தது மூதூர்க்கு.

இறால்குழி கங்கை, உப்பாறு
இவற்றுக் கெல்லாம் பாலமதும்
உருவே ஆக வகை செய்தார்
ஊரும் உயர உதவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த ராஜ பக்சயினால்
மலர்ந்த இந்தப் பாலங்கள்
உகந்த உயர்வாம் நிலைதன்னை
உரித்தாய் தந்தது மூதூர்க்கு.

பயணக் கஷ்டம் ஏதுமிலா
பாங்குறு ஊராய் மூதூரும்
உயரிய நிலையை அடைந்ததுவே
உன்னதம் பெற்றுக் கொண்டதுவே.

இன்று மூதூர் பயணத்தில்
இன்னரும் வசதி நிறையூராய்
அன்றோ ஆகிப் போயுளது
அதிக உயர்வும் பெற்றுளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் பயணம் என்கின்ற
கதையும் ஊரில் அழிந்ததுவே!
இடரே இல்லா இன்பத்தின்
இன்னரும் பயணம் புலர்ந்ததுவே!

படகும் மூழ்கிய விடயத்தைப்
பதியின் வரலாற் றேடுகளில்
இடம்பெற ஏ.எஸ் உபைத்துல்லாஹ்
இனிதுறு கதையாய் இதையாத்தார்.

ஜலசமா திஎன்னும் சிறுகதையால்
ஜெயமுற இதனை விளக்கிட்டார்
நிலமிசை படகு விபத்திதுவும்
நீங்கா நினைவாய் நிலைத்திடுமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.சீயெம் சரீபெனும் எழுத்தாளன்
எம்.எம் றெசீனின் நினைவாக
தம்முடை சங்கமம் மலரினிலே
தந்தார் படகு விபத்ததனை.

படகு விபத்து விடயமது
பலவாம் நூறு ஆண்டின்பினும்
திடமாய் மூதூர் வரலாற்றில்
தீரா நினைவாய் நிலைத்திடுமே.

அதனால் அன்றோ அனஸ்யானும்
ஆழ்ந்த படகின் விடயத்தை
இதமாம் காவியம் எனயாத்தேன்
இதிகா சம்என ஓங்கிடவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இளைஞன் என்றிருந்த
அனஸ்யான் கடலின் பயணத்திற்(கு)
நன்றாம் படகு தேவையென
நாட்டம் மிகைத்தே செயற்பட்டேன்.

மூதூர்க் கடலில் படகதுவும்
மூழ்கிப் போக முன்னாலே
ஏதோ! அன்றென் னுள்ளத்தில்
எழிலாம் சிந்தனை தோன்றியதே!

பயணப் படகு உகந்ததல்ல
பாதகம் கடலில் ஏற்படலாம்
உயர்வுறு இந்தச் சிந்தனையை
உரியார்க் கெல்லாம் உணர்த்திட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் அரசியல் ஞானகுரு
எழிலார் அஷ்ரஃப் அவர்ஊடே
தந்திடப் புதிய படகுகளை
தக்க அமைச்சரைக் கோரிட்டேன்.

படகுப் பயண நெருக்கடியைப்
பெரிதும் குறைக்கும் நோக்கினிலே
இடமாம் கிளிவெட்(டி) பாதைவழி
இடம்பெறப் பயணமும் கோரிநின்றேன்.

இவற்றின் சான்றுக் காகிதத்தை
இந்தக் காவி ஈற்றினிலே
அவசியம் நீங்களும் அறிவதற்காய்
அதனையும் ஈங்கே இணைத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் படகும் மூழ்கிட்ட
கனமாம் துயர நிகழ்வதுவும்
இடரை எங்கள் வாழ்வெல்லாம்
ஈந்தே நிற்கும் புரிவோமே!

எனினும் நடந்தவை எல்லாமும்
ஏகன் இறைவன் செயலென்று
நினைத்தே நாமும் நடந்திடுவோம்
நிம்மதி கொஞ்சம் அடைந்திடுவோம்.

இறைவா! படகு விபத்தினிலே
இனிதாம் தமது ஆவிகளைத்
துறந்த மாந்தர் அனைவரையும்
தூயோர் என்றே ஏற்றிடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலைக் கபுராய் ஆக்கியதால்
காசினி யில்ஜல சமாதியெனத்
தடயம் ஆகிப் போனோர்மேல்
தயவை நீயும் காட்டிடுவாய்!

படகு விபத்தில் பலியாகிப்
பதியின் வாழ்வைத் துறந்திட்டோர்
இடரே இல்லாச் சொர்க்கத்தில்
இருக்க இறையே! அருள் புரிவாய்.

பகன்றதாம் இந்தக் காவியத்தில்
பிழைகள் இருப்பின் பகன்றிடுவீர்
அகமே உவந்து அதையானும்
அடுத்ததாம் பதிப்பில் சேர்த்திடுவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் மக்கள் மேன்மைக்காய்
முயன்று பணிகள் செய்வோர்கள்
பூதல மீதில் புகழ்பெற்று
பெரிதாம் வாழ்வு வாழியவே!

படகுப் பயணக் கஷ்டத்தைப்
போக்கும் வகையில் முயற்சித்து
தொடராய்ப் பாலம் மூன்றதனைத்
தந்திட உழைத்தோர் வாழியவே!

படகு விபத்தினைப் பற்றியேதான்
பகன்றிடும் காவியம் இதனையுமே
படித்திடு வோரும் புவியினிலே
பாங்குடன் என்றும் வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகு மூழ்கிய காவியமிது
பதியினில் புகழுடன் வாழியவே!
நடந்த சரிதை சான்றெனவே
நிலமிசை வாழிய! வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MINISTRY OF TRANSPORT & HIGHWAYS

D. R. Wijewardene Mawatha, Colombo 10.

Fax 684547

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Minister 687311 | Secretary 687312 | 687124 Private Secretary | 687437 / 687077 Office | 687105 | P.O. Box 552 |

My No. [illegible] | Your No. [illegible] | Date 11. 11. 1992

Hon. M.H.M.Ashraff,
Leader of Sri Lanka Muslim Congress,
'Dharussalam',
51, Vauxhall Lane,
Colombo 2.

Dear Member of Parliament,

FERRY TRANSPORT - MUTUR TO THE MAINLAND

I wish to acknowledge receipt of your letters dated 92.10.28 and 92.10.29 received at this office on 92.11.05 with regard to the above subject.

Your letters have been referred to the General Manager, Sri Lanka Transport Board for report. Further communication will be sent in due course.

Yours sincerely,

(Wijayapala Mendis),
Minister of Transport & Highways.

மூதூர் தரைவழிப் பயணப்பாதையை திறப்பதற்காக கிளிவெட்டி படகுச் சேவையை மீள் திறக்க வேண்டும். இதன் மூலம் மூதூர் கடல் வழிப் பயணச் சேவையின் மக்கள் கூட்டத்தின் அளவைக் குறைக்க முடியும் என அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் ஊடாக, போக்குவரத்து அமைச்சர் கௌரவ. விஜயபால மெண்டிஸ் அவர்கள் கவனத்திற்கு மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் கொண்டுவந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

" Dharussalam "
51 Vauxhall Lane
Colombo - 02.

October 29, 1992.

Honourable Wijepala Mendis, M.P.
Minister of Transport and Highways
D.R. Wijewardene Mawatha
Colombo - 10.

My dear Minister,

MODERNIZED LAUNCH SERVICE - TRINCOMALEE - MUTUR .

Many people from Mutur complain to me, the launch that is presently in use - between Trincomalee and Mutur - has been in service for the last four (04) decades.

This launch carries over 300 persons at a time, and - quite often - it gets stopped mid-way, due to mechanical defects, and no transport is possible during stormy weather.

The new launch provided by the Trincomalee Transport Board, TWO (02) YEARS AGO, went under repair in just a few months, and it has NOT been put into service, to-date.

In consideration of the great necessity of this launch service to the people living in and around Mutur, may I request you to provide TWO (02) modernised launches for their convenience.

Thank you,

Sincerely yours,

- M.H.M. ASHRAFF, M.P. -
LEADER - SRI LANKA MUSLIM CONGRESS

MHA/-

மூதூர் கடற்பயண சேவையில் மிகவும் பழமையான படகுகளே ஈடுபடுத்தப்படுகின்றன. அதனால் இங்கு விபத்துக்கள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது. எனவே நவீன மயமான படகுகள் இச் சேவைக்கு வழங்கப்படல் வேண்டும் என படகு விபத்துக்கு முன்பதாகவே 29-10-1992 ம் ஆண்டிலேயே தூரதிருஷ்டியுடன் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களின் கவனத்திற்கு மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் கொண்டுவந்தார். மூதூர் படகு விபத்து நடந்தது 25-01-1993


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை- மூதூர் கடலில் 'மகாவலி' படகு சேவை

## - அமைச்சர் அஷ்ரப் பணிப்பு

12-9-94

(நமது நிருபர்)

'மகாவலி' எனும் படகு, திருமலை- மூதூர் கடற் பயண சேவையில் ஈடுபடவுள்ளது.

சுமார் 100 பயணிகள்வரை பிரயாணம் மேற்கொள்ளக்கூடிய இப்படகு சேவையை உடனடியாக ஆரம்பிக்குமாறு துறைமுக, கப்பற்றுறை, புனர்வாழ்வுத்துறை அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப், திருமலை துறைமுக அதிகார சபை வதிவிட முகாமையாளர், தவிசாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

### நிவாரணம்

அத்துடன் வன்செயலால் பாதிக்கப்பட்டு மீளக்குடியேறியுள்ள திருமலை ஜமாலியா பகுதி மக்களுக்கும் உலர் உணவு நிவாரணம், இழப்பீடுகளையும் உடனடியாக வழங்குமாறு அமைச்சர் அஷ்ரப் திருமலை பட்டிணமும் சூழலும் பகுதி பிரதேச செயலாளரைப் பணித்துள்ளார்.

திருமலை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் கட்சியின் அதியுயர் பீட உறுப்பினருமான எம்.எம்.ஏ. அனஸ் இப்பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

" Dharussalaam "
51 Vauxhall Lane
Colombo - 02.

October 7th, 1992.

Honourable Wijeyapala Mendis, M.P.
Minister of Transport & Highways
D.R.Wijewardene Mawatha
Colombo -10.

My dear Minister,

FERRY TRANSPORT - MUTUR TO THE MAINLAND.

May I please bring to your attention, the ferry-transport services - between Mutur and Kilivetti, in the Trincomalee District - have been suspended for the last two (02) months, as the result of the terrorists activity that prevailed in that area durind that time.

The people in these areas are compelled to undergo great hardships in their efforts to meet the day-to-day requirements due to the suspicion of this service.

May I please request you to make arrangements for the resumption of this ferry service, while providing this area with sufficient ~~so~~ Security cover.

Thank you.

Sincerely yours,

M. H. M. ASHRAFF M. P.
LEADER SRI LANKA MUSLIM CONGRESS

M.H.M.ASHRAFF, M.P. -
LEADER - SRI LANKA MUSLIM CONGRESS

Honourable Minister of State for Defence

AAQ/-

Veerakesary 12-09-1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் - திருமலை படகுச் சேவைக்கு மகாவெலி நவீன இயந்திரப் படகு

மூதூர் - திருகோணமலை 8 மைல் கடல் பயணத்திற்கு திருகோணமலை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 'மகாவெலி' என்ற நவீன இயந்திரப் படகு சேவையில் ஈடுபடுத்தப்படும்.

துறைமுகங்கள், கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.எம்.ஏ. அனஸின் கோரிக்கையை ஏற்றுத் திருகோணமலை துறைமுக அதிகாரசபை வதிவிட முகாமையாளருக்கு இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

5-1-1995 Veerakesari



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூழ்கிய லோஞ்சதனால் மூதூரார் அன்றுற்ற
ஆழ்ந்த கவலைகளை அப்படியே - வாழ்கின்ற
காவியமாய் யானும் கரிசனையாய் யாத்தேனே!
ஓவியம்போல் நீடித்து ஓங்க.

மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

ISBN.978-955-44598-5-4

Printed by: ART - 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org